Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 4, Issue - 1, November 2024 E-ISSN: 2583-0481

# Joy in Bharathi

**S. Pavithra,** Assistant Professor of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi,
Affiliated to Bharathiar University, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7395-9699
**DOI: 10.5281/zenodo.14250125**
**Received:** 20 July 2024; **Revised:** 22 September 2024; **Accepted:** 28 October 2024; **Available online:** 26 November 2024.

## Abstract

*The emotions that manifest through the gestures of our body show the joyful state. Tolkappiyar, the great Tamil writer of all times; says the types of such realities are of eight types. These are common to internal and external ones. The eight types reappear as thirty-two levels in the combination of four out of four levels. In general, one of the essentials of life is happiness. One can progress in life only if he/she is happy. When deprived of happiness, the body and mind become weak. Happiness is the only way that takes away all weakness and gives freshness to life. Such reality is the proof of the blissful life and is the original type of truth. This type of reality appears as an expression of pleasure. This joy is mentioned at the last of eight truths as mentioned by Tolkappiyar. Hence, this article examines the manner in which Bharathiar has used joy in his poems.*

**Keywords:** Bharathiyar, Poems, Joy, Wealth, Sense.

## References

[1] Annamalai, M. (UA). *Naladiyar Moolamum Thelivuraium*. Visalakshi Nilayam, Chennai.
[2] Ilampuranar. *Tholkkapiyam*. Sarada Publishing House, Chennai, First Edition, 2005.
[3] Usharani, Su. *Bharatiyar Kavithaikal Moolamum Thelivuraium* Volume - 1. Varthamanan Pathipagam, Chennai, 2017.
[4] Usharani, Su. *Bharatiyar Kavithaikal Moolamum Thelivuraium* Volume - 2. Varthamanan Pathipagam, Chennai, 2017.
[5] Chidambara Mudaliar, T.K. *Muththoollairam.* Potikai Malai Pathipagam, Thirukkutalam, Tenkasi, 1957.
[6] Palaniappan, MU. *"Tholkappiyam Virasoliyam Suttum Meippadukal". Vallamai* e-Journal, ISSN: 2348-5531, 2015.
[7] *Pingala Nikandu*. Kazhagam Publication, Thanindiya Saiva Siddhanta Nool Pathippuk Kalagam, Tirunelveli, First Edition, 1968.
[8] Puliyurkesigan, (eds). *Pathitruppathu.* Pari Nilayam, Chennai – 108, 1974.
[9] Perasiriyar, *Tholkkapiyam.* Saiva Siddhanta Nool Pathippuk Kalagam, Tirunelveli, 1951.
[10] Viswanathan, A. (U.A.). *Kaliththogai.* New Century Bookstore, Fifth Edition, 2013.
[11] Vidhuvan Balur Kannappa Mudaliar. *Dictionary of Tamil Literature*. CBD, 1957.
[12] Vellai Varanar, K. *Tolkappiyam Meipatial Uraivalam*. M K University, Madurai, 1986.
[13] Revathi, K. "Perumpanatruppadail Meippadukal." *Vallamai* e-Journal, ISSN:2348-5531.
[14] Jayakumar, C. *Thirukkural.* Indu Publishers, First Edition - 2019.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** Nil
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ **International License**.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 4, இதழ் - 1, கார்த்திகை 2055 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# பாரதியில் உவகை

**செ. பவித்ரா,** உதவிப் பேராசிரியர், தமிழ் மொழித்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, பாரதியார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0002-7395-9699

**DOI: 10.5281/zenodo.14250125**

**ஆய்வுச் சுருக்கம்**

*நம் புற உடலின் மூலம் வெளிப்படும் உணர்ச்சிகளையே நாம் மெய்ப்பாடு என்கின்றோம். இந்த மெய்ப்பாடுகளை தொல்காப்பியர் எட்டு வகையாக கூறுகிறார். இவை எட்டும் அகம் மற்றும் புறத்திணைகளுக்கு பொதுவானவையாக அமைகிறது. இந்த எட்டு மெய்ப்பாடுகளும் நான்கு நான்கு நிலைகள் என முப்பத்து இரண்டு நிலைகளன்களாக தோன்றுகின்றன. அவற்றில் வாழ்விற்கு இன்றியமையாத ஒன்று மகிழ்ச்சி. மகிழ்ச்சியாக இருந்தால் மட்டுமே அவனது வாழ்வில் முன்னேற்றத்தை அடைய முடியும். மகிழ்ச்சியை இழந்த வேளையில் அவனது உடல் மற்றும் மனமானது பலவீனமாகிவிடுகிறது. இந்த பலவீனத்தைப் போக்கி வாழ்வில் புத்துணர்ச்சியை வழங்குவது மகிழ்ச்சியே ஆகும். இந்த மகிழ்ச்சியான இன்ப வாழ்விற்கு சான்றாக கூறப்படும் மெய்ப்பாடு உவகை மெய்ப்பாடாகும். இந்த உவகை மெய்ப்பாடானது இன்பத்தின் வெளிப்பாட்டால் தோன்றும். இம்மெய்ப்பாட்டை தொல்காப்பியர் கூறும் எட்டு மெய்ப்பாட்டினுள் இறுதியாக வைத்துக் கூறப்படுகிறது. அவ்வாறு கூறப்படும் உவகை மெய்ப்பாட்டை பாரதியார் தமது கவிதைகளில் கையாண்டுள்ள விதம் குறித்து இக்கட்டுரையில்* ஆராயப்படுகிறது.

**திறவுச் சொற்கள்**: பாரதியார், கவிதைகள், மகிழ்ச்சி, செல்வம், உணர்வு.

## உவகை மெய்ப்பாடு

உவகை என்பது காம உணர்ச்சியால் ஏற்படும் மகிழ்ச்சி என கூறலாம். இந்த உவகை மெய்ப்பாடானது மகிழ்ச்சியினால் வெளிப்படும் ஒரு உணர்வு. இந்த மெய்ப்பாட்டைப் பேராசிரியர் *"உவகை எனினும் மகிழ்ச்சி எனினும் ஒக்கும்"* மெய்ப்பாட்டியல் உரைவளத்தில், (ப-74) கூறியிருக்கிறார். அதாவது உவகை என்றாலும் மகிழ்ச்சி என்றாலும் ஒன்றுதான் எனக் கூறியிருக்கக் காண்கின்றோம். சிருங்காரம் என்பது வடமொழியில் உள்ள முதல் மெய்ப்பாடாகும் என்று வீரசோழியம் கூறுகிறது. அதையே தொல்காப்பியம் கூறுவதாக (மு.பழனியப்பன்) தனது கட்டுரையில் கூறக் காண்கிறோம். இந்த உவகை மெய்ப்பாடு மேற்கூறிய மெய்ப்பாடுகளைப் போல நான்கினை நிலைகளாகக் கொண்டு தோன்றுகிறது. அவையாவன, **“செல்வம் புலனே புணர்வு விளையாட்டெனா / அல்லல் நீத்த உவகை நான்கே” (தொல்.பொருள். - 255)** அதாவது உவகை மெய்ப்படானது செல்வம், புலன், புணர்வு,

விளையாட்டு என்ற நான்கு துன்பம் இல்லாத மகிழ்ச்சியான நிலையில் இந்த உவகை மெய்ப்பாடு தோன்றுகிறது.

1. **செல்வம் - செல்வம் அதிகமாக இருப்பதால் ஏற்படும் மகிழ்ச்சி**
2. **புலன் - கல்வியின் பயனால் ஏற்படும் அறிவுடையமை**
3. **புணர்வு - காமத்தினால் தோன்றும் மகிழ்ச்சி**
4. **விளையாட்டு - விளையாடுதல் அதாவது புனலாடுதல், கடல் ஆடுதல் போன்றவை.**

இவ்வாறு துன்பம் நீங்கிய நான்கு நிலைகளில் உவகை மெய்ப்பாடு பிறக்கும். இந்த உவகை மெய்ப்பாட்டினைப் பாரதியார் அவரது கவிதைகளில்,

**பாட்டி லேயறங் காட்டெனு மோர்தெய்வம்**
**பண்ணில் இன்பமுங் கற்பனை விந்தையும்**
**ஊட்டி எங்கும் உவகை பெருகிட**
**ஓங்கும் இன்கவி ஓதெனும் வேறொன்றே! (தோத்திரப்பாடல் -19. 2)**

என்ற பாடலில் பராசக்தியின் கட்டளையினால் கவிதை பாடுவதைப் பற்றி கூறுகிறார். இதில் மகிழ்வான ராகங்களையும் கற்பனையினால் புதுமையானவற்றை சேர்த்து எல்லா இடங்களிலும் மகிழ்ச்சி பொங்கி மேலோங்கும்படி இனிய கவிதைகளைப் பாடு என்று வேறு ஒரு கடவுள் என்னை ஆணையிடும் என்கின்றார். பாட்டு என்பது அனைவருக்கும் இன்பத்தை தரும் என்ற இடத்தில் உவகை என்னும் சொல்லானது ‘மகிழ்ச்சி’ என்ற பொருளில் வருவதைக் காணலாம்.

**செல்வம்**

செல்வம் என்பது பொன், பொருள் போன்ற செல்வ வளங்களைக் குறிக்கிறது. இதை தமிழிலக்கிய அகராதி, (ப-193) செல்வம் என்பதற்கு இன்பம், அழகு, பொருள், சீர், சொர்க்கம், கல்வி, செழிப்பு போன்ற பொருள்களை தருகிறது. இதேபோன்று பிங்கல நிகண்டு (ப-264) செல்வம் என்பதற்கு சீர், வெறுக்கை, விபவம், திரு, மா, ஆக்கம், வாழ்க்கை, பொறி என்று பொருள் கூறுகிறது. இவ்வாறு வரும் செல்வம் என்னும் மெய்ப்பாட்டினைப் பற்றி *பேராசிரியர்* (மெய்ப்பாட்டியல் உரைவளத்தில், பா-74) ‘*செல்வம் என்பது நுகர்ச்சி*’ என்கின்றார். இதே சொல்லிற்கு விளக்கம் தரும் *சோமசுந்தர பாரதியார்* ‘*திரு அல்லது ஆக்கம்*’ (மேலது, ப-76) என்று கூறக்காண்கின்றோம். இவற்றிற்கு உரை எழுதிய *வெள்ளைவாரணர்* செல்வம் என்னும் ‘*சொல்லிற்கு செல்வம் என்பது செல்வத்தால் உளதாகும் நுகர்ச்சி*’ (மேலது, பா-77) என்று விளக்கம் கூறியிருக்கிறார். இந்த செல்வமானது பாரதியார் கவிதைகளில் பின்வருமாறு காணலாம்.

**செல்வச் சிறப்பு**

அதிக அளவிலான செல்வத்தினால் ஏற்படும் நுகர்ச்சியைப் பற்றிக் கூறுவதாகும். இந்த செல்வத்தால் ஏற்படும் சிறப்பினைப் பாரதியாரின் கவிதைகளில்,

**பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்**
**பண்ணி மலைகளென வீதி குவிப்போம்,**
**கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்**
**காசினி வணிகருக்கு அவைகொடுப் போம் (பாரத தேசம், பா. 8)**

என்ற பாடலில் பாரத நாட்டின் செல்வ வளங்களைப் பற்றிக் கூறும் இடங்களில் பட்டாடைகளையும், பருத்தியினால் செய்த ஆடைகளை எல்லாம் அளவுக்கு அதிகமாக தயாரித்து மலைகளைப் போல குவித்து வைத்திருக்கிறோம். ஏராளமான செல்வங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு உலகில் எங்கும் உள்ள வியாபாரிகளுக்கு அவற்றை எல்லாம் விற்று செல்வங்களைக் சேகரிப்போம் என்று கூறுகிறார.; அவ்வாறு கூறும் இடத்தில் பாரத நாடும் நாட்டு மக்கள் முன்பு அளவுக்கு அதிகமான செல்வ செழிப்பைப் பெற்று விளங்கினார்கள் என்பதை இந்த வரிகளை சாட்சியாக கொண்டு அறியமுடிகிறது. எனவே இவ்விடத்தில் செல்வம் மெய்ப்பாடானது தன்கண் வெளிப்படுவதைக் காணலாம். இதேபோல பாஞ்சாலி சபதம் என்ற குறுங்காவியத்தில் வந்த பாடலில்,

**ஆணிப்பொற் கலசங்களும் - ரவி**
**யன்னநல் வயிரத்தின் மகுடங்களும்**
**மாணிக்கக் குவியல்களும் - பச்சை**
**மரகதத் திரளும்நன் முத்துக்களும்**
**பூணிட்ட திருமணி தாம் – பல (பாஞ்சாலி சபதம், பா. 23)**

என்ற பாடலில் தருமனுடைய நாட்டில் அவன் சிறப்பாக ஆட்சி செய்வதற்காக அந்நாட்டு மக்களும், குறுநில மன்னர்களும் அவனுக்கு பரிசாக பல செல்வங்களைக் கொண்டு வந்து கொடுக்கின்றனர். அதில் சிறப்பான தரம் மிகுந்த தங்கம் நிறைந்த பானைகளையும், சூரியனைப் போன்று ஒளி வீசுகின்ற வைரங்கள் பதிக்கப்பட்ட கிரீடங்களும், மாணிக்கங்களால் ஆன குவியல்களும், பச்சை நிறத்தினாலான மரகதங்களும், உலகில் சிறந்த முத்துக்களும், மின்னும் நவரத்தினங்கள் பதிக்கப்பட்ட மாலைகள் என அனைத்தையும், பரிசாக தருமனுக்கு வழங்கினர். இவ்வாறு கூறும் இடத்தில் தர்மனுக்கு பரிசுகளால் கிடைத்த செல்வ வளங்களை இப்பாடலின் வழி நாம் அறிந்து கொள்ளமுடிகின்றன. இதனால் செல்வத்தை நிலைகளனாகக் கொண்டு பிறக்கும் உவகை மெய்ப்பாடானது பிறர்க்கண் தோன்றுகிறது. இதேபோன்று கலித்தொகையில் வரும் பாடலில் செல்வ நுகர்ச்சியைப் பற்றி பின்வருமாறு கூறுகிறது. அதில்,

**உரனுடை உள்ளத்தை; செய்பொருள் முற்றிய**
**வளமையான் ஆகும் பொருள் இது என்பாய்! (கலி, பா. 12)**

இப்பாடலில் தலைவனிடம் தோழி கூறுவதாக அமைந்துள்ளது. இக்கூற்றில் தோழி பொருளீட்ட செல்லும் தலைவனின் மனதை மாற்றியது பற்றிக் கூறப்படுகிறது. இதில்

தலைவனே! நீ மனதில் அதிகமான தைரியமுடையவன் என எனக்குத் தெரியும். நீ பொருள் தேடச் சென்று விட்டு திரும்பி வரும் போது அளவுக்கு அதிகமான செல்வ வளங்களைக் கொண்டு வருவாய். அதை வைத்துக்கொண்டு மகிழ்ச்சியாக வாழலாம் என நீ எண்ணுகிறாய் என்று கூறுகிறாள். அவ்வாறு கூறும் இடத்தில் தலைவன் சேமித்து வரும் வளங்களைப் பற்றிக் கூறுவதன் மூலம் இங்கு செல்வம் என்ற உவகை மெய்ப்பாடானது தோன்றுவதைக் காணலாம்.

**புலன்**

புலன் என்னும் மெய்ப்பாடு கல்வி அறிவால் விளையும் பயனை குறிப்பதாகும். இந்த புலன் என்னும் சொல்லிற்கு *தமிழிலக்கிய அகராதி* (பா-298) *புலன் - காட்சி, அறிவு, விடயம், வயல்,* என்று பொருள்களைத் தருகிறது. இதே போன்று இளம்பூரணர் அவரது உரையில், மெய்ப்பாட்டியல் உரைவளத்தில், (ப-73) '*புலனைக் கண்டும் கேட்டும் ஐம்புலன்களால் நுகரும் நுகர்ச்சி*' என்கின்றார். இதேபோன்று பேராசிரியர் அவரது உரையில் (ப-74) புலனாவது '*கல்வியின் பயனாகிய அறிவுடைமை*' என்கின்றார். இவரைப்போலவே புலன் என்னும் மெய்ப்பாட்டுக்கு விளக்கம் தரும் சோமசுந்தர பாரதியார் (மேலது, ப-76) '*அறிவிலுறும் அகமலர்ச்சி*' என்கின்றார். பேராசிரியர் போன்றே வெள்ளைவாரணரும் அவரது ஆய்வுரையில் (மேலது, ப-77) புலன் என்பது '*கல்வி பயனாகிய அறிவுடைமை*' என்கின்றார். இவ்வாறு புலன் என்பதற்கு ஐம்புல நுகர்ச்சி என்று இளம்பூரணர் கூறினார். அவரது கூற்றுப்படி கல்வி என்பது ஐம்புலன்களால் நுகர முடிந்த ஒரு நுகர்ச்சி என்பதால் பேராசிரியரும் வெள்ளைவாரணரும் அதையே பின்பற்றிக் கூறியிருக்கலாம். இதை புலன் என்பது ஐம்புலன்களையும் குறிக்கும். ஒருவன் தன் ஐம்புலன்களைக் கொண்டும் இன்ப நுகர்ச்சியைப் பெறுவான் என (கி.ரேவதி) தமது கட்டுரையில் கூறக்காண்கிறோம். இங்கு பேராசிரியர் கூற்றுப்படி பாரதியாரின் கவிதைகளில் வரும் புலன் மெய்ப்பாட்டைப் பற்றி பின்வருமாறு காணலாம்.

**கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு**
**கட்சிக்கு அஃது பொதுவில் வைப்போம் (விடுதலை கும்மி, பா. 5)**

இப்பாடல் வரிகளைக் கொண்டே நாம் அவருடைய கல்வியினால் விளைந்த பயனை அறிந்து கொள்ளமுடியும். ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பு என்பது பொதுவான ஒன்று என்பதை நமக்கு புரியவைப்பதற்கு பாரதியார் அவரது கல்வியை முதன்மையாகப் பயன்படுத்தியிருக்கிறார். அதேபோன்று பெண்கள்களின் முன்னேற்றத்திற்கும், அவர்கள் கல்வி கற்றுச் சிறந்து விளங்க வேண்டும் என்று அவர் கூறியதன் வாயிலாக பாரதியின் கல்விப் பயனால் விளைந்த பயனை இங்கு அறியமுடிகிறது. எனவே இவ்விடத்தில் புலன் மெய்ப்பாடு பாரதியாரின் கவிதைகளில் வழி வெளிப்படுவதைக் காணலாம்.

**கல்வி அறிவுடைமை**

இப்பாடலில் கல்வியினால் ஏற்படும் பயன்களையும் அதனால் விளையும் அறிவின் திறத்தையும் பற்றிக் கூறப்படுகிறது. இதில்,

**கல்வி பெற்றும் பதம் பெற்றும் வாழ்வார்!**
**அறிவை வளர்த்திட வேண்டும் மக்கள்**
**அத்தனை பேருக்கும் ஒன்றாய்**
**சிறியாரை மேம்படச் செய்தால்- பின்பு**
**தெய்வம் எல்லாரையும் வாழ்த்தும் (பல்வகைப் பாடல்கள், பா. 28)**

என்ற இப்பாடலானது கல்வியின் சிறப்பைக் கூறுகிறது. இந்த நாட்டில் உள்ள அனைவரும் கல்வி அறிவு பெற்ற உயர்ந்த நிலையை அடைந்து விடுவார்கள். மனிதர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான கல்வி அறிவினை வழங்கிட வேண்டும். அவர்கள் அனைத்திலும் மேலோங்கும்படி செய்திட வேண்டும். குறைந்த கல்வி அறிவு உடையவர்களுக்கு கற்றுக் கொடுத்து அவர்களை கல்வி அறிவில் சிறந்தவர்களாகச் செய்தால் அதன் பயனாக கடவுள் நம்மை வாழ்த்தி வேண்டியவற்றையெல்லாம் வழங்குவார். இப்பாடலானது கல்வியைப் பிறருக்கு கற்றுத் தருவதன் பயனாக கடவுள் வேண்டியவற்றை வழங்கி வாழ்த்துவார் எனும் இடத்தில் புலன் மெய்ப்பாடு வெளிப்படுவதைக் காணலாம். இம்மெய்ப்பாடானது இக்கவிதையில் தன்னிலையில் தோன்றுகிறது. இதேபோன்று வேறொரு பாடலில்,

**சோதி அறிவில் விளங்கவும் - உயர்**
**சூழ்ச்சி மதியில் விளங்கவும் - அற**
**நீதி முறைவழு வாமலே - எந்த**
**நேரமும் பூமித் தொழில்செய்து – கலை**
**ஓதிப் பொருளியல் கண்டுதாம் – பிறர் (கண்ணன் என் சத்குரு, பா. 10)**

என்ற பாடலில் கண்ணன் தனது குருவாக இருந்து கற்பித்ததைப் பற்றி பாரதியார் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடல்களில் ஞானிகள் என்பவர் கல்வி, வேள்வி அறிவினை உடையவர்கள். அவர்கள் தம்மை சூழ்ந்த மன வருத்தங்களை எல்லாம் தம்மிடமிருந்து போக்கி வாழ்வார்கள். அப்படிப்பட்ட ஞானிகள் ஒளியைப் போன்று மிகுந்த அறிவாற்றலுடனும், புத்திக் கூர்மையுடனும் இருப்பார்கள். அவர்கள் நீதி முறைகளில் இருந்து சற்றும் தவறாமல் இருப்பார்கள். எல்லா வேலைகளிலும் உலகுக்கு தேவையான காரியங்களைச் செய்து கொண்டும் கலைகளின் திறத்தை பற்றியும் கற்றுக் கொண்டே இருப்பார்கள். இந்த பாடலில் ஞானிகள் தெளிந்த அறிவுடைமைக்கு காரணம் அவர்களது கல்வியின் பயனால் விளைந்தது என்பதை அறியமுடிகிறது. இதில் புலன் என்னும் மெய்ப்பாடு பிறர் கண் வெளிப்படுவதை இவ்விடத்தில் நம்மால் காணமுடிகிறது. இதேபோன்று நாலடியாரில்,

**கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்**
**நல்லறிவு நாளும் தலைப்படுவர் - தொல் சிறப்பின்**
**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு**
**தண்ணீர்க்கும் தான்பயத் தாங்கு. (நாலடி, பா. 139)**

என்ற நாலடியார் பாடலானது புலன் மெய்ப்பாட்டுக்கு தக்க சான்றாகக் கூறலாம். ஏனென்றால் இப்பாடலில் படிக்காதவர்களாக இருந்தாலும் அவர்கள் கற்றவர்களோடு சேர்ந்து கொள்ளும் போது அவர்களிடம் உள்ள நல்லறிவும், படிப்பினையும் கல்லாதவர்களுக்கும் நல்ல அறிவினை ஏற்படுத்தும். பாதிரி பூவானது நல்ல மணம் வீசக்கூடிய ஒரு பூவாகும.; அந்தப் பூவானது மண்பானையில் போட்டு வைத்தால் முதலில் அப்பூவின் மனதை அந்த மண்பானை பெற்றுவிடு பின் அந்தப் பானையில் உள்ள தண்ணீரும் அப்பூவின் வாசத்தை காற்றில் பரப்பும். அதேபோல கல்லாதவர்களாயினும் கற்றோர்களுடன் சேரும் பொழுது அவர்களுடைய அறிவுடைமை கல்லாதவர்களிடமும் வந்து சிறப்பு பெறும் என்று கூறப்பட்டுள்ள இப்பாடலில் புலன் மெய்ப்பாடானது பிறர்க்கண் வெளிப்படுவதைக் காணலாம்.

**புணர்வு**

புணர்வு என்பது தலைவனும் தலைவியும் புணரும் புணர்ச்சியைக் குறிக்கிறது. இதை பிங்கல நிகண்டு, (ப-520) *புணர்ச்சி என்பது சையோகம், இணக்கம்* என்ற பொருள்களைத் தருகிறது. இதை போன்று தமிழ் இலக்கிய அகராதியானது (ப-295) புணர்ச்சி என்பது *இசைவு, கலத்தல்* என்ற பொருள்களைத் தருகிறது. இந்த புணர்வு என்னும் மெய்ப்பாட்டிற்கு *இளம்பூரணர்* மெய்ப்பாட்டியல் உரைவளத்தில், (ப-73) *'மகளிர்ரோடு புணர்தல்'* என்று விளக்கம் கூறுகிறார். இதே போல *பேராசிரியர்* (மேலது, ப-74) அவரது உரையில் புணர்வு என்பது *'காமப் புணர்ச்சி'* முதலியன என்கின்றார். இதே போன்று சோமசுந்தர பாரதி அவர்கள் தமது உரையில் (மேலது, ப-76) 'கற்புறு காதர் கூட்டம்' என்கின்றார். இவர்களைப் போலவே *வெள்ளைவாரணரும்* அவரது ஆய்வுரையில், (ப-77) புணர்வு என்பது *'அன்போடு புணர்ந்த ஐந்திணை மருந்தின் காமப் புணர்ச்சி'* என்கின்றார். இவ்வாறு புணர்ச்சியானது கற்பு காலத்திலும், களவு காலத்திலும் ஏற்படும். மேற்கூறிய உரையாசிரியர்களின் கூற்றுப்படி ஆணும் பெண்ணும் அன்போடு புணரும் காமப் புணர்ச்சியைக் குறிப்பதே புணர்வு ஆகும். இம்மெய்ப்பாட்டைப் பாரதியாரின் கவிதைகளில் மேலோட்டமாகவே சுட்டப்படுகிறது. எனவே அவற்றைப் பற்றிப் பின்வருமாறு காணலாம். இந்த புணர்வு மெய்ப்பாடானது பாரதியாரின் கவிதைகளில்,

**கூடிப் பிரியாமலே - ஒரிராவெலாம்**
**கொஞ்சிக் குலவி யங்கே,**
**ஆடி விளை யாடியே - உன்றன் மேனியை**
**ஆயிரம் கோடி முறை**
**நாடித் தழுவி மனக் - குறை தீர்ந்து நான்**
**நல்ல களி யெய்தியே,**
**பாடிப் பரவசமாய் - நிற்கவே தவம்**
**பண்ணிய தில்லை யடி! (கண்ணம்மா என் காதலி, பா. 4)**

இப்பாடலில் பாரதியார் கண்ணனைத் தனது காதலியாகவும், தன்னை காதலனாகவும் கொண்டு பாடியுள்ளார். இதில் தன் காதலி குறிப்பிடத்திக்கு வராமல் தவறியதால் தன் பிரிவு ஆற்றாமை நிலையைப் பற்றிக் கூறுகிறார். இதில் அடியே கண்ணம்மா நான் உன்னுடன் சேர்ந்து மகிழ்ந்தும், உன்னை விட்டு ஒரு நொடி கூட விலகி இருக்காமல் ஒரு இரவு முழுவதும் உன்னை கொஞ்சிக் கொண்டும் அன்போடு உன்னுடன் பேசிக்கொண்டும் இருக்க வேண்டும். பல காதல் விளையாட்டுகளால் உன்னுடைய தேகத்தை ஆயிரம் கோடி முறை அன்போடும் ஆசையோடும் தழுவ வேண்டும். அதனால் என்னுடைய மனதில் உள்ள கவலைகளை எல்லாம் மறக்கும் அளவுக்கு அதிகமான ஆனந்தம் அடைந்தும் என்னுடைய நிலை மறந்து நான் வண்டினைப் போல கீதம் இசைத்து நிற்கவேண்டும். நான் தவம் ஏதும் செய்யாமல் போய் விட்டேனே! ஏன் நீ என்னை காணவராமல் போய்விட்டாய் என்ற பாடலில் பிரிவு ஆற்றாமையால் தலைவன் கூறுவதாக அமைந்துள்ளது. இதில் ஆயிரம் கோடி முறை முத்தமிட்டு கட்டியணைக்கும் இடங்களில் புணர்வு மெய்ப்பாடானது தன்னிலையில் தோன்றுவதைக் காணலாம். இதே போன்று குயில் பாட்டில் வரும் மற்றொரு பாடலில்,

**ஆர்ந்து தழுவி அவனிதழில் தேன்பருகச்**
**சிந்தை கொண்டாய், வேந்தன் மகன் தேனில் விழும்**
**வண்டினைப் போல்**
**விந்தையுறு காந்தமிசை வீழும் இரும்பினைப்போல்**
**ஆவலுடன் நின்னை யறத்தழுவி, ஆங்குனது**
**கோவை யிதழ்பருகிக் கொண்டிருக்கும் வேளையில் (குயில் பாட்டு, பா. 113-117)**

என்னும் இப்பாடலில் சின்ன குயிலியின் முன் ஜென்மக் கதையை கூறுகிறது. அதில் ஒரு நாள் குயிலி தனது தோழிகளுடன் வனத்தின் நடுவே விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது அவ்வழியே சேர இளவரசன் மானை விரட்டி கொண்டு வந்தான். அப்போது அவன் உன்னுடைய தோழிகளையும், உன்னையும் கண்டு அருகில் வருகிறான். உன் தோழிகள் அவன் அருகில் வந்ததும் உன்னை விட்டு விட்டு ஓடி விடுகின்றனர். உன்னை கண்டதும் அவன் காதல் கொண்டு நீதான் என் வாழ்க்கை துணைவி எனக் கூறுகிறான். அதை ஏற்றுக் கொண்டு நீயும் மகிழ்ச்சி அடைந்தாய். நீ இளவரசனுடைய வலிமையான தோள்களை மகிழ்ச்சியோடு தழுவிக்கொண்டான். பின் அவனது இதழ்களில் ஊரும் தேனினை அருந்துவதற்காக எண்ணம் கொள்கின்றாய். உன்னுடன் இளவரசன் மதுவில் விழுந்து எழுந்த வண்டினைப் போல அதாவது தன்னுடைய நிலையை மறந்து உன் மீது மயக்கத்தில் இருந்தான். அதிசய காந்தத்தில் இரும்பு எப்படி ஒட்டிக் கொள்ளுமோ அதேபோல அவன் உன்னை விருப்பத்தோடு இறுக்கமாகக் தழுவிக்கொண்டான். பின் உன்னுடைய கோவைப்பழம் போன்ற சிவந்த உதடுகளைச் சுவைத்துக் கொண்டிருந்தான் எனக் கூறும் இடங்களில் அவர்களிடையே ஏற்பட்ட இன்ப உணர்வினைப் பற்றி நாம் அறியமுடிகிறது. முற்கூறியது போன்று பாரதியார்

இந்த புணர்ச்சி மெய்ப்பாட்டை பெரிதும் தனது கவிதைகளில் கூற முற்படாததால் நாம் இவற்றை புணர்ச்சி மெய்ப்பாட்டிற்குள் உள்ளடக்கிக் கொள்ளலாம். இதே போன்று காம இன்பத்தை பற்றி வள்ளுவர் அவரது குறளில்,

**கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்தொடி கண்ணே உள (குறள் - 1101)**

என்ற திருக்குறளில் புணர்ச்சி மகிழ்தல் பற்றி கூறப்படுகிறது. அதில் கண்களால் கண்களைப் பார்த்துக் கொண்டும், காதுகளால் காதுகள் கேட்டுக் கொண்டும், நாக்கினால் உண்டும், மூக்கினால் முகர்ந்தும், உடம்பினால் தீண்டுதலும் என்ற நமது ஐம்புலன்களினாலும் அனுபவிக்கக் கூடிய இன்பமானது ஒளி பொருந்திய வளையல்கள் அணிந்த மனைவி இடத்தில் உள்ளது என்று கூறும் இடத்தில் இம்மெய்ப்பாடு ஐம்புலன்களால் அனுபவித்து இன்புறும் என்கிறார் வள்ளுவர்.

**கூடிக் களித்திடல்**

வள்ளிப்பாட்டில் வரும் பாடலொன்றில் வள்ளியை காதல் கொள்ளும் முருகனின் நிலையிலிருந்து பாடப்பட்டுள்ளதாக இப்பாடல் அமைகிறது. அதில்,

**எனையால்வாய் வள்ளீ! வள்ளீ!**
**இளமயிலே! என் இதயம் மலர் வாழ்வே!**
**கனியே! சுவையுறு தேனே!**
**கலவியிலே அமுதனையாய்! - (கலவியிலே)**
**தனியே ஞானவிழியாய்! நிலவினில்**
**நினை மருவி! வள்ளீ! வள்ளீ!**
**நீயா கிடவே வந்தேன் (வள்ளிப்பாட்டு -2)**

என்ற பாடலானது வள்ளியின் மீது முருகன் கொண்ட காதலை உணர்த்துவதாக அமைந்துள்ளது. இதில் வள்ளியை வர்ணிக்கிறார் பாரதியார். வள்ளி! நீ என்னை முழுமையாக ஆட்சி செய்பவள். இளமையான மயிலிலைப் போன்றவள். என்னுடைய உள்ளத்தில் கொத்துக் கொத்தாக பூத்துக் குலுங்கும் பூவே! நீ வாழ்க! இனிய இனிப்பு மிகுந்த கனியைப் போன்றவளே! தேனை போன்றவளே! அறிவினை உடைய விழிகளை உடையவள். சந்திரன் வரும் குளிர்ச்சி பொருந்திய இரவினிலே வள்ளி உன்னுடன் சேர்ந்து நான் உன்னுடையவனாக வேண்டும் என்று உன்னை தேடி நான் இங்கே வந்துள்ளேன் என்று கூறும் இடத்தில் புணர்வு மெய்ப்பாடானது இக்கவிதையில் தோன்றுகிறது. இதில் புணர்வு மெய்ப்பாடானது தன்னிலையில் தோன்றுவதைக் மேற்கூறப்பட்டுள்ள சான்றுகளின் வழி நம்மால் உணர முடிகிறது.

**உறுதோறு உயிர்தளிப்பத் தீண்டலால் பேதைக்கு**
**அமிழ்தின் இயன்றன தோள் (குறள் -1106)**

என்னும் காமத்துப்பாலில் வரும் குறளில் தழுவுதலின் இனிமையைப் பற்றிக் கூறுகிறார். என் மனைவியோடு இன்பம் நுகர்கின்ற காலத்தில் சோர்ந்து வாடிக்கிடந்த எனது உயிரானது புத்துணர்ச்சி அடைந்து மகிழ்ச்சி அடைவதற்கு அவளது அமிர்தத்தை போன்ற தோள்களே காரணம் என்று கூறும் இடத்தில் தழுவுதலின் இன்பம் வெளிப்படுகிறது. எனவே இங்கு புணர்ச்சி மெய்ப்பாடானது தன்னிலையில் தோன்றுவதைக் காணமுடிகிறது.

**இன்பத்தின் வெளிப்பாடு**

முருகன் வள்ளியின் மீது கொண்ட காதலை வெளிப்படுத்துவதை பற்றிக் இதில் கூறப்படுகிறது. அதில்,

**இரவியைப் போன்ற முகமுடையாய்!**
**இட்டு பல முத்தமிட்டுப் பல முத்தம்**
**இட்டுனைச் சேர்ந்திட வந்தேன் (வள்ளிப்பாட்டு, பா. 1.3)**

என்ற பாடலில் பாரதி தன்னை முருகனாக எண்ணி வள்ளியைத் தன் காதலியாகக் கொண்டு கவிதை இயற்றியுள்ளார். இதில் சூரியனைப் போன்ற ஒளிபொருந்திய முகத்தினை உடையவளே வள்ளி! உன்னை நான் கட்டி அணைத்து முத்தங்கள் இட்டு உன்னை நான் மகிழ்ச்சியுடன் சேர வந்துள்ளேன் என்று முருகன் கூறுகிறார். இவ்வாறு கூறும் இடத்தில் புணர்வு மெய்ப்பாடு வெளிப்படுவதைக் காணலாம். அத்துடன் இந்த மெய்ப்பாடானது தன்னிலையில் வெளிப்படுகிறது. இதேபோன்று மற்றொரு பாடலில் பாரதி தன்னை தலைவியாக பாவித்து முருகனை தலைவனாக எண்ணி முருகனிடம் கிளியை தூது விடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இவ்வாறு புணர்ச்சி மெய்ப்பாடானது காமச் சுவையின் இன்பநிலையையும், காதல் வெளிப்பாடுகளையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.

**விளையாட்டு**

விளையாட்டு என்பது ஆணும் பெண்ணும் இணைந்து கடல் ஆடுவதையும், புனலாடுவதையும் இவ்விடத்தில் குறிக்கிறது. இங்கு உவகை மெய்ப்பாட்டில் விளையாட்டைவைத்துள்ளதால் விளையாட்டினால் ஏற்படும் உவகையைக் கூறுவதாக கொள்ளலாம். இந்த விளையாட்டைப் பற்றி *இளம்பூரணர்* தனது மெய்ப்பாட்டியல் உரைவளத்தில், (ப-73) விளையாட்டு என்பது *'சோலையும் ஆறும் புகுந்து விளையாடும் விளையாட்டினாலும் உவகை பிறக்கும்'* என்கின்றார். இதேபோல் பேராசிரியர் (மேலது, ப-74) விளையாட்டு என்பது *'யாறுங் குளனுங் காவுமாடிப் பதியிகந்து வருதல்'*என்கின்றார். *சோமசுந்தர பாரதியார்* அவர்கள் தமது உரையில், (மேலது, ப-76) *'தீதில் பொய்தல்'* என்று விளையாட்டுக்கு விளக்கம் தருகிறார். மெய்ப்பாட்டியல் உரைவளத்தில் *வெள்ளைவாரணர்* (மேலது, ப-77) விளையாட்டு என்பது *'மலையும் ஆறும் குளமும் சோலையும் முதலிய இயற்கை வனப்பு மிக்க இடங்களில் தங்கித துணையோடு விளையாடி மகிழ்தல்'* என்கின்றார். மேற்கூறிய உரையாசிரியர்களின் கருத்துப்படி விளையாட்டு மெய்ப்பாடு என்பது ஆறு, குளம்,

சோலை, மலை போன்ற இடங்களில் தனது தலைவிடன் மகிழ்ந்து இன்புற்று விளையாடுவதைப் பற்றிக் கூறுவதாகக் கொள்ளலாம்.

**மலை அடிவாரத்தில் விளையாட்டு**

தலைவனும் தலைவியும் கூடி விளையாடுவதைப் பற்றி கூறுவதே இந்த விளையாட்டு ஆகும். இந்த மலை அடிவாரத்தில் தலைவனும் தலைவியும் கூடி விளையாடுதல் என்பது பாரதியாரின் கவிதைகளில் மிக குறைவான இடங்களில் காணப்படுகிறது. இந்த விளையாட்டு மெய்ப்பாட்டைப் பாரதியாரின் கவிதைகளில்,

**நேரத்தி லேமலை வாரத்தி லேநதி**
**யோரத்திலே யுனைக் கூடி - நின்றன்**
**வீரத் தமிழ்ச் சொல்லின் சாரத்திலே மனம்**
**மிக்க மகிழ்ச்சி கொண்டாடி – குழல் (வள்ளிப் பாட்டு, பா. 1)**

என்று வள்ளியை தலைவியாகவும் பாரதியார் முருகனாகவும் இருந்து கவிதை இயற்றியுள்ளார். இதில் மாலைப் பொழுதில் மலையடிவாரத்தில் ஆற்றங்கரையில் உன்னுடன் நான் சேர்ந்து கொண்டு நீ பேசும் வீரமிக்க தமிழ் சொற்களை எல்லாம் கேட்டு என் உள்ளமானது இனிமையில் பெரும் களிப் பெறுகிறது. அதனால் உன்னை நான் பாராட்டுவேன். பின் உந்தன் அடர்த்தியான கூந்தலின் மீதும், ஈரமான உன் உதடுகளின் மீதும், மார்பு ஓரத்திலும் நான் முத்தமிடுவேன். அதன் பின் உன்னை என்னுடைய உள்ளத்தோடு உள்ளமாக சேர்ந்து தழுவி தெய்வ நிலையை அடைந்ததன் பலனை நான் இன்று எப்படியாவது அடைந்து விடுவேன் என்று கூறப்படுகிறது. இக்கவிதையில் விளையாட்டு மெய்ப்பாடானது தலைவனும், தலைவியும் மலை அடிவாரம் மற்றும் ஆற்றங்கரை ஓரங்களில் நடத்திய காதல் விளையாட்டின் அடிப்படையில் வருகிறது. இம்மெய்ப்பாடு இங்கு தன்கண் தோன்றுவதைக் காணமுடிகிறது.

**குளத்தில் விளையாட்டு**

முன்பு கூறிய பாடலைப் போன்று இப்பாடலும் தலைவியும், தலைவனும் குளம் மற்றும் ஆறுகளில் புனலாடுவதைப் பற்றிக் கூறுகிறது. இந்த புனலாடுதல் பாரதியாரின் கவிதைகளில்,

**வட்டங்க ளிட்டுங் குளமக லாத**
**மணிப்பெருந் தெப்பத்தைப் போலேநினை**
**விட்டு விட்டுப்பல லீலைகள் செய்து நின்**
**மேனி தலைவிட லின்றி – அடி (வள்ளிப்பாட்டு, பா.1. 2)**

என்ற இப்பாட்டில் வள்ளியைப் பற்றி முருகனாகப் பாரதியார் பாடுவதாக உள்ளது. இதில் வட்டமாக நீர் அலைகள் எழுப்பி வரும் குளத்தினை விட்டு விட்டுச் செல்லாமல் இருக்கும் புணையானது இருக்கும். அதுபோல நானும் சிறிது நேரம் ஓய்வு எடுக்க விட்டு பின் மீண்டும் பல காதல் விளையாட்டுகளைப் புரிந்து உன்னை விட்டு விலக முடியாமல் கூடி இருக்க நான் வந்தேன் எனும் இப்பாடல் வரிகளில் விளையாட்டு மெய்ப்பாடானது குளத்தில்

விளையாடுவதில் தோன்றுவதைக் காணலாம். சான்றாக பதிற்றுப்பத்தில் வரும் பாடல் ஒன்றில்,

**கொல் புனல் தளிரின் நடுங்குவனள் நின்று, நின்**
**எறியர் ஓக்கிய சிறு செங் குவளை என இரப்பவும், ஒல்லாள்;**
**நீ எமக்கு யாரையோ? எனப் பெயர்வோள் கையதை**
**கதுமென உருத்த நோக்கமொடு, அது நீ (பதிற்று.ப, பா.52)**

இப்பாடலானது பதிற்றுப்பத்தில் வரும் ஆறாம் பத்தில் இடம்பெறுகிறது. இதில் சேரலாதன் அவனது மனைவியுடன் ஊடல் கொண்டதைச் சமாதானப்படுத்துவதாக இப்பாடல் அமைகிறது. நீர் துறையில் மகளிரும் ஆடவரும் துணங்கைக் கூத்து ஆடுகின்றனர். அப்போது சேரலாதன் அவர்களுடன் சேர்ந்து ஆடிக் கொண்டிருந்தான். அதைக் கண்ட அவனது மனைவி அளவுக்கு அதிகமாக கோபம் கொள்கிறாள். கோபத்தில் அவளது உடம்பு முழுவதும் வியர்வை துளிகள் அரும்பியது. அருவி நீரால் தளர்ந்தாடும் தளிர் போன்று அவளும் உடல் கொண்டு ஆடினாள். பின் செங்குவளை மலரைப் பறித்து சேரலாதனை அடிப்பதற்காக ஓங்கினாள். சேரலாதன் அவளிடம் வந்து நடந்ததற்கு மன்னிப்பு கேட்டு அருள்புருவாயாக என கேட்கிறான். அவனைப் பார்த்து தலைவி யார் நீ என கேட்டுவிட்டு கோபத்தில் அவனிடமிருந்து விலகிச் சென்று விடுகிறாள். இப்பாடலில் நீர் துறையில் துணங்கை கூத்து ஆடிய இடத்தில் விளையாட்டு மெய்ப்பாடு தோன்றுவதைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

உவகை மெய்ப்பாட்டின் நான்கு வகை மெய்ப்பாடுகளும் காமப் புணர்ச்சியினாலும், காதலினாலும் ஏற்படும் மகிழ்ச்சியின் வெளிப்பாடு எனக் கொள்ளலாம். இம்மெய்ப்பாடுகள் நான்கும் பாரதியாரின் கவிதைகளில் ஒரு சில இடங்களில் இடம்பெற்றுள்ளது என்பதை மேற்கூறிய சான்றுகளின் வழி நாம் அறிய முடிகின்றன. அதே போன்று வெகுளி மெய்ப்பாட்டிற்கு எதிர்ச் சுவை உடைய உவகை என்னும் மெய்ப்பாடானது நமக்கு மகிழ்ச்சியின் வெளிப்பாட்டால் தோன்றும் உணர்வாகும். இந்த உவகை மெய்ப்பாட்டைப் பற்றி இவ்வியல் விளக்கியுரைக்கிறது. இந்த உவகை மெய்ப்பாடானது செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு என்ற நான்கினை நிலைகளாகக் கொண்டு தோன்றுகிறது. இவை நான்கும் மகிழ்ச்சி பொருளில் பாரதியாரின் கவிதைகளில் எடுத்துரைக்கப்பட்டுள்ள விதம் குறித்து இவ்வியல் முழுமையாக விவரிக்கிறது.

**துணைநின்றநூல்கள்**

[1] அண்ணாமலை, மு. (உ.ஆ). *நாலடியார் மூலமும் தெளிவுரையும்.*
[2] விசாலாட்சி நிலையம், சென்னை – 14, மு.ப – 2003.
[3] இளம்பூரணர். *தொல்காப்பியம்.* சாரதா பதிப்பகம், சென்னை, 2005.

[4] உஷாராணி, சு. *பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும்,* தொகுதி - 1. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2017.

[5] உஷாராணி, சு. *பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும்,* தொகுதி - 2. வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2017.

[6] சிதம்பர முதலியார, டி.கே. *முத்தொள்ளாயிரம்.* பொதிகை மலை பதிப்பகம், திருக்குற்றாலம், தென்காசி, 1957.

[7] பழனியப்பன், மு. "*தொல்காப்பியம், வீரசோழியம் சுட்டும் மெய்ப்பாடுகள்*". *வல்லமை* மின்னிதழ், ISSN: 2348-5531, 2015.

[8] *பிங்கல நிகண்டு.* கழக வெளியீடு, தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்பு கழகம், திருநெல்வேலி, 1968.

[9] புலியூர் கேசிகன், (ப.ஆ). *பதிற்றுப்பத்து.* பாரி நிலையம், சென்னை, 1974.

[10] பேராசிரியர். *தொல்காப்பியம்.* தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்பு கழகம், திருநெல்வேலி, 1951.

[11] விசுவநாதன், அ. (உ.ஆ). *கலித்தொகை.* நியூ செஞ்சுரி புத்தக நிலையம், 2013.

[12] வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார். *தமிழ் இலக்கிய அகராதி.* சென்ட்ரல் புக் டிப்போ, சென்னை, 1957

[13] வெள்ளை வாரணர், க. *தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம்.* மதுரைகாமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1986.

[14] ரேவதி, கி. "பெரும்பாணற்றுப்படையில் மெய்ப்பாடுகள்." *வல்லமை* மின்னிதழ், ISSN: 2348-5531.

[15] ஜெயக்குமார், சி. *திருக்குறள்.* இந்து பதிப்பகம், 2019.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.